--

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

| | |
|---|---|
| அசல் வழக்கு எண். 1001/2023 | இ.ம.எண். |
| எஸ்.சி.ஓ.பி.எண். | நி.வே.ம.எண். |

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.2**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.S. சண்முகப்பிரியா, பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராதா | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா. 2 : முதல் விசாரணை**:

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரப்பெற்றதின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் வாதி ஜெயலட்சுமி என்னுடன் பிறந்தவர். நானும் அவரும் இரட்டையர்கள். இந்த வழக்கின் பிரதிவாதி என்னுடைய கணவர் ஆவார். வாதி ஜெயலட்சுமி என் கணவர் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார். நானும் என் கணவரும், குமரேசனும்

வேலை விசயமாக அடிக்கடி பெங்களூர் சென்று வருகிறோர்ம். பெங்களூர் சென்ற சமயத்தில் என்னுடைய பிள்ளைகள் மற்றும் அத்தைக்கு ஆதாரவாக என் அண்ணன் வெற்றிவேலை தங்கவைத்து சென்றிருந்தோம். சக்தி புரோமோட்டர்ஸ் என்பரிடம் இடம் வாங்குவதற்காக 2 பத்திர பேப்பர்கள் என்னுடைய 2 காசோலைகள் மற்றும் எனது கணவருடைய காசோலைகள் 2 மற்றும் எங்களது தோட்டத்தின் பத்திரம் ஆகியவற்றை எங்களது வீட்டில் வைத்திருந்தோம். 20.08.2023ல் நாங்கள் பெங்களூர்ல் இருந்து வீட்டிற்கு திரும்பி வந்துவிட்டோம். 17.09.2023ல் மேற்படி பத்திரம் வேண்டும் என்ற காரணத்தினால் மர பீர்வோவில் இருந்து எடுக்கப்போனாம். அப்போது பத்திரம் அங்கு இல்லை. என் அண்ணன் வெற்றிவேல் மட்டும்தான் எங்களது வீட்டிற்கு வருவார். வேரு யாரும் வீட்டிற்கு வரமாட்டர்கள். உடனே என் அம்மாவிடம் போன் செய்து பத்திரத்தை காணவில்லை என்று சொன்னேன். என் அம்மா என் அண்ணன் பண நெருக்கடியில் இருப்பதாகவும் அதற்காக பத்திரத்தை எடுத்து வந்துவிட்டதாகவும் கேட்டு வாங்கித் தருவதாகவும் சற்று பொருமையாக இரு வாங்கி தருகிறேன் என்று கூறினார். திரும்ப கேட்டபோது வாங்கி தருவதாக கூறினார். 20.02.2023ம் தேதி வெற்றிவேல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என் கணவருக்கு வந்தது. மற்றொரு அண்ணன் யுவராஜ் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பும் வந்தது. என் அம்மாவிடம் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புகள் குறித்து கேட்டேன். என் அம்மா என் அண்ணன் சற்று பண நெருக்கத்தில் இருப்பதாகவும், ரூ.1,00,000/- அவருக்கு கொடுத்து உதவுவதாக என்னிடம் கேட்டார். என் கணவர் என் அம்மாவிற்கு போன் செய்து இப்படிதான் பத்திரத்தை திருடி சென்று வைத்துக்கொண்டு பிளாக்மைல் செய்வதா என சத்தம் போட்டார். 25.02.2023ம் தேதி நாங்கள் வழக்கறிஞர் மூலமாக மேற்படி அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு அனுப்பினோம். மேற்படி பதில் அறிவிப்பில் மொத்தம் 4 காகோலைகள், 2 பத்திர பேப்பர்கள் மற்றும் தோட்டத்து பத்திரங்கள் ஆகியவற்றை குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது. 6 மாதம் கழித்து மேற்படி எங்களுடைய காசோலைகளை பயன்படுத்தி என் தங்கை கணவர் என் மீதும் என் சகோதரி என் கணவர் மீதும் வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர். விரைவு குற்றவியல் நீதிமனறத்தில் யுவராஜ் என் மீதும் வெற்றிவேல் எண் கணவர் மீதும் காசோலை மேசடி வழக்கு தாக்கல் செய்தனர். நானும் என் கணவரும் மேற்படி நபர்களிடம் தலா

ரூ.9,00,000/- வீதம் மொத்தம் ரூ.36,00,000/- கடன் வாங்கி உள்ளதாக மேற்படி வழக்குகளில் குறிப்பிட்டுள்ளது. அவர்களிடம் நாங்கள் கேட்டதற்கு 1 ஏக்கர் தோட்டத்தை எழுதி வைத்தால் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ளவதாக கூறுனார். என் அண்ணன் வெற்றிவேல் வேலைக்கே போவதில்லை. ரூ.9,00,000/- கொடுப்பதற்கு வசதி இல்லை. தங்கை ஜெயலட்சுமி ரூ.8000/- தான் மாத சம்பளம் வாங்குகிறார். அவரது கணவர் ரூ.10,000/- தான் மாத சம்பளம் வாங்குகிறார்., தலா ரூ.9,00,000/- கடன் கொடுப்பதற்கு அவர்களுக்கு வசதி வாய்ப்பு கிடையாது. அவர்களுக்கு பணத்தட்டுப்பாடு என்று நாங்களே பலமுறை அவர்களுக்கு பணம் கொடுத்து உதவியுள்ளோம். அம்மாவிடம் கேட்டபோது நான் பையன்கள் இருவரையும் நான் நம்பியுள்ளேன். அவர்களை எதிர்க்க முடியாது. அவர்களை நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். ரெப்கோ வங்கியில் கடன் வாங்கி பூந்துறையில் கட்டியிருந்த வீடு, கடை ஆகியவற்றை விற்று கடனை கட்டியிருந்தார்கள். எங்களுக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு அவர்களின் பணம் எதுவும் கிடையாது. 17.09.2022ல் தான் பத்திரம் தொலைந்த விசயம் எங்களுக்கு தெரிய வந்தது. எனவே என் சகோதரியால் என் கணவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வழக்கு தள்ளுபடி செய்ய தக்கது ஆகும்.

O.S.No.1001/2023 Dated:23.01.2025
PSJC, Erode.